# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 6,958 — 1918 ம் ௵ ஆவணி ௴ 2 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV. — நான்காம் பாகம்.

---

தேசாதிபதியவர்களால் பிரசித்தம்.

---

பெரிய பிரித்தானியாவும் அயர்லந்துஞ்சேர்ந்த நாடுகளுக்குங் கடல்களுக் கப்பாலிருக்கும் ஆதிபத்திய நாடுகளுக்கும் அரசரும் மதபாலகருமாகிய ஐந்தாம் ஜோர்ஜ வேந்தர் நாமத்தினாலே:

மகிமைதங்கிய சென்ற் மைக்கல் அன்ட் சென்ற் ஜோர்ஜ வரிசையின் கொம்பானியன் பட்டவர்த்தனரும் இலங்கைக்கும் அதைச்சேர்ந்த ஆதிபத்தியங்களுககும் ஆட்சி யதிகாரியுமாகிய உத்தமனார் றெஜினால்ட் எட்வட் ஸ்றப்ஸ் அவர்களாலே செய்யப்படும்

### விளம்பரம்.

ஆர். ஈ. ஸ்றப்ஸ்.

மன்னார் டிஸ்திறிக்கின் பள்ளிக்கூடச் சங்கத்தாரால் 1907 ம் ஆண்டு நாட்டுப்பள்ளிக்கூடச் சட்டத்தின் 19 ம் பிரிவின்படி சில உபவிதிகள் உண்டாக்கப்பட்டு மேற்குறித்த சட்டத்து 20 ம் பிரிவின் 2 ம் கீழ்ப்பிரிவிற் கிசைய முறைமையாகப் பெலப்படுத்தப்பட்டு, 1914 ம் ஆண்டு தை மாசம் 17 ந் திகதியின் பிரசித்த பத்திரத்தால், 1914 ம் ஆண்டு தை மாசம் 30 ந் திகதிக் "கெசற்" பத்திரிகையில் பிரசித்தப்படுத்தப்பட்டன. குறித்த டிஸ்திறிக் பள்ளிக்கூடச் சங்கத்தார், குறித்த உபசட்டங்களை அழித்து, அதற்கு வதலாக, 19 ம் பிரிவுக்கும் 1917 ம் ஆண்டு 34 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 20 ம் பிரிவின் (1) (*b*) உட்பிரிவுக்கும் அமைய, இத்துடன் அிணைத்திருக்கும் இடாப்பில் சொல்லப்பட்ட உபசட்டங்களை உண்டுபண்ணி இருத்தலினாலே:

இலங்கை ஆட்சியதிகாரியாகிய நாம் சொல்லப்பட்ட சட்டத்தின் 20 ம் பிரிவின் 2 ம் உட்பிரிவினால் நமக்குக் கொடுக்கப்பட்டிருககும் அதிகாரத்தைக்கொண்டும் அதிகார மந்திர சபையாரது ஆலோசனையோடும் மேற்சொல்லப்பட்ட உப சட்டங்களை அழித்ததை உறுதிப்படுத்துகிறோம் என்பதையும் குறித்த டிஸ்திறிக் பள்ளிக்கூடச் சங்கத்தவரால் உண்டாக்கப்பட்டு இத்துடன் அிணைக்கப்பட்டிருக்கும் இடாப்பில் சொல்லப்பட்ட உபசட்டங்களை அதுபோன்ற ஆலோசனையோடு நாங்கள் பெலப்படுத்துகிறோமென்பதையும் நீவிர் அறிந்துகொள்வீர்களாக.

எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத் தோளாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு ஜூலை மாதம் இருபத்தொன்பதாம் தேதியாகிய இன்று மேற்சொல்லிய இலங்கைத்தீவி லுள்ள கொழும்பில் கொடுக்கப்பட்டது.

உத்தமனாரது கட்டளைப்படி,

ஏ. எஸ். பெக்டன்,

அக்றிங் கலோனியல் சக்கிறத்தார்.

---

### உபவிதிகள்.

மன்னார்ப் பிரிவின் பள்ளிக்கூடச் சங்கத்தவரால் 1907 ம் ஆண்டின் 8 ம் சட்டமாகிய நாட்டுப்பள்ளிக்கூடக் கட்டளைச்சட்டத்தின் 19 ம் 20 ம் பிரிவுகளின் பிரகாரம் இதனோடிணைத்திருக்கும் A என்னும் இடாப்பில் விபரிக்கப்பட்டிருக்கும் இடத்திற்கென்று உண்டாக்கப்பட்ட உபவிதிகள்:—

1. இந்த உபவிதிகளில் "பையன்" "பெண்பிள்ளை" "பிள்ளை" என்னும் சொற்கள் இதனோடிணைத்திருக்கும் டாப்பில் விபரித்த இடங்களில் வசிக்கும் "பையன்" "பெண்பிள்ளை" "பிள்ளை" என்பவரைக் கருதும்.

"சட்டம்" என்பது அதிகார சபையில் உத்தம தேசாதிபதியவர்களால் காலத்துக்குக்காலம் அனுமதி செய்யப்படும் உதவி நன்கொடைபெறும் பள்ளிக்கூடச்சட்டமே.

"வரவு" என்பது சட்டத்தால் விதிக்கப்பட்ட பிரகாரம் ஒரு வரவு இடாப்பில் பதியப்பெற்ற முழு வரவைக்கொண்டதாகச் சட்டத்தால் குறிக்கப்பட்ட காலத்தின் வரவைக் கருதுகின்றது.

"ஒரு பிள்ளையின் கல்விப்பயிற்சிக்கு வேண்டிய போதியனவும் தகுதியுள்ளனவுமான ஒழுங்குகள்" "நியாயமான சாட்டுப்போக்கு என்னும் மொழிகள் 1907 ம் ஆண்டின் நாட்டுப்பள்ளிக்கூடங்களைப்பற்றிய சட்டத்தின் 20 ம் பிரிவின் 1 (b) உட்பிரிவில் குறிக்கப்பட்ட கருத்தையேகொள்வன.

"பள்ளிக்கூடச் சோதனைகாரன்" என்பது உத்தம தேசாதிபதியவர்களால் நியமிக்கப்பட்ட ஒரு பள்ளிக்கூடச் சோதனைகாரனைக் குறிக்கும்.

2. ஆண்பிள்ளைகள் பாடசாலைக்குப் போகுதல்.—6 வயதுக்குக் கீழ்ப்படாத ஒவ்வொரு ஆண்பிள்ளையின் பெற்றாரும் அப்படிப்பட்ட பிள்ளை 5 ம் வகுப்பைக் கடக்கும்வரையில் அல்லது 14 வயதாகும் வரையில் (முன்னடப்பதெதுவாயினும்) அப்படிப்பட்ட பிள்ளையின் கல்விப்பயிற்சிக்குப் போதியனவும் தகுதியுள்ளனவுமான ஒழுங்குகள் செய்யப்பட்டிராவிடினும், அல்லது, பாடசாலைக்குப் போகாததற்கு நியாயமான சாட்டுப்போக்கு இல்லாவிடினும், அப்படிப்பட்ட பிள்ளையைத் தான் குடியிருக்குமிடத்திலிருந்து 3 கட்டைக்குள்ளாக இருக்கும் ஒரு பகிரங்க சுதேச பாடசாலைக்குப் போகும்படி பண்ணவேண்டும்.

2A. பெண்பிள்ளைகள் பாடசாலைக்குப்போகுதல்.—6 வயதுக்குக் கீழ்ப்படாத 12 வயதுக்கு மேற்படாத ஒவ்வொரு பெண்பிள்ளையின் பெற்றாரும், அல்லது, முகம்மதிய, தமிழ்ப், பெண்பிள்ளைகளாயிருந்தால், 6 வயதுக்குக் கீழ்படாத 10 வயதுக்கு மேற்படாத அப்படிப்பட்ட ஒவ்வொரு பெண்பிள்ளையின் பெற்றாரும் அப்படிப்பட்ட பெண்பிள்ளையின் கல்விப்பயிற்சிக்குப் போதியனவும் தகுதியுள்ளனவுமான ஒழுங்குகள் செய்யப்பட்டிராவிடினும், அல்லது பாடசாலைக்குப் போகாதற்கு நியாயமான சாட்டுப்போக்கு இல்லாவிடினும், அப்படிப்பட்ட பெண்பிள்ளையைத்தான் குடியிருக்கும் இடத்திலிருந்து 2 கட்டைக்குள்ளாயிருக்கும் ஒரு பகிரங்க சுதேச பாடசாலைக்குப் போகும்படிபண்ண வேண்டும். ஆனால், பெண்பிள்ளை குடியிருக்குமிடத்திலிருந்து 2 கட்டைக்குள் பெண்பிள்ளை உபாத்தி படிப்பிக்கிற ஒரு பாடசாலையில்லாவிட்டால், முகம்மதிய பெண்பிள்ளை பாடசாலைக்குப் போகவேண்டியதில்லை.

3. ஒவ்வொரு பையனும் அல்லது பெண்பிள்ளையும் பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டிய நேரமாவது அவர்களோடொத்த வயதுள்ள பிள்ளைகளது படிப்புக்காக பள்ளிக்கூடந் திறந்திருக்கும் முழுநேரமுமே.

4. இதனால் எப்பொழுதும் இவ்வுபவிதிகளில் ஒன்றும் :—

(a) 1907 ம் ஆண்டின் நாட்டுப் பள்ளிக்கூடச் சட்டத்தின் 21 (d) ம் பிரிவின்படி சமயபோதனை படிப்பிக்கும் நேரங்களில் பிள்ளைகள் வராதிருப்பதை மன்னித்து விடுவதற்குத் தடையாயிருக்கக்கூடாது.

(b) பிள்ளையின் பெற்றார் சேர்ந்துள்ள சமய கூட்டத்தாரால் சமய காரியங்களுக்கென்றே கைக்கொள்ளப்படும் எந்த நாளிலும் எந்தப் பிள்ளையாவது பள்ளிக்கூடத்துக்கு வரவேண்டுமென்று கட்டுப்பாடு செய்யாது.

5. கிராமச்சங்கத்தின் அக்கிராசனரின் மனத்திருப்திக்கு நன்மைபயக்கும் வேலையில் அமர்ந்திருக்கும் 12, 14 வயதுள்ள ஒரு பையன் தற்போதுள்ள சட்டத்தினால் குறிக்கப்பட்ட ஐந்தாந் தரத்தில் வாசனை, எழுத்து, கணக்கு என்னும் பாடங்களில் சித்தியடைந்துவிட்டானென்று ஒரு பள்ளிக்கூடச் சோதனைகாரனிடத்திலிருந்து ஒரு உறுதிப்பத்திரம் பெற்றுக்கொண்டால் அப்பையன் பள்ளிக்கூடத்துக்கு வரத்தேவையில்லை. பத்து வயதுக்கு மேற்பட்ட ஒரு பெண்பிள்ளை நன்மை பயக்கும் வேலையிலமர்ந்திருப்பதாகக் கிராமசங்க அக்கிராசனருக்குத் திருப்தியாயிருந்தால் அவளைப் பள்ளிக்கூடத்துக்கு வரும்படி கடமைப்படுத்த வேண்டியதில்லை.

6. இந்த உபவிதிகளையாவது அல்லது அவற்றிலொன்றையாவது அனுசரியாமல் அசட்டைபண்ணி மீறுகிற பெற்றார் ஒவ்வொருவரும் குற்றவாளியாகக் காணப்பட்டால் முதல் குற்றம் ஒன்றுக்கு 20 ரூபாய்க்கு மேற்படாமலும் மென்மேலும் செய்யும் குற்றத்துக்கு நாளொன்றுக்கு 5 ரூபாய்க்கு மேற்படாமலுந் தெண்டமிருக்க ஆளாவார்.

7. ஒரு பாடசாலையை ஸ்தாபிக்க, அல்லது இங்கிலீஸ் பாஷையிலாகுதல் அல்லது வேறு எந்தப் பாஷையிலாகுதல், எந்தப் பாடசாலை அறையிலாகுதல் அல்லது அதற்காக முன் அவரால் பாவிக்கப்படாத எந்தக் கட்டிடத்திலாகுதல் பாடசாலைக்குப்போகும் பிராயமுள்ள பிள்ளைகள் கூடிய வகுப்பை அல்லது வகுப்புகளைப் படிப்பிக்க விரும்பும் எவரும், சமீபத்திலிருக்கும் பாடசாலைச்சோதனைகாரனுக்கு, அல்லது உதவிச் சோதனைகாரனுக்கு அல்லது டிஸ்திரிக் பாடசாலைச் சங்க அக்கிராசனருக்கு அப்படிப்பட்ட பாடசாலை வேலையை அல்லது படிப்பித்தலைத் தொடங்குகிறதற்குக் குறைந்தது ஒரு மாசத்துக்குமுன் அறிவிக்கவேண்டும், அப்படி யறிவித்த பிற்பாடு, அவருடைய வகுப்பு அல்லது வகுப்புகளையும், படிப்பிக்க உத்தேசித்திருக்கும் பாடங்களையும்பற்றி வித்தியாகர்த்தருக்குத் தேவையான சமாச்சாரங்களைக்கொடுக்க வேண்டும்.

கவனிப்பு.—பின்வருவனதான இந்த உபவிதிகளில் 1 ம் 4 ம் பிரிவுகளில் குறிக்கப்பட்ட நாட்டுப்பள்ளிக்கூடச் சட்டத்தின் பகுதிகள் :—

20 ம் பிரிவு (1) (b) : ஒரு பெற்றார் தமது பிள்ளை உதவி நன்கொடை பெறுதற்காகச் சாதாரண வித்தியாபோதனாங்கத்தலைவரால் பதிவுபெற்ற ஒரு பள்ளிக்கூடத்திலாவது, உதவி நன்கொடை பெறுவதற்குப்பண்ணிய மனுப்பத்திரம் ஆலோசனைக்குள்ளிருக்கப்பெற்ற ஒரு பள்ளிக்கூடத்திலாவது, போதியதும் தகுந்ததுமான கல்விப்பயிற்சி யூட்டப்படுகின்றதென்று வித்தியாபோதனாங்கத்தலைவரால் உறுதிப்படுத்தப்பெற்ற ஒரு பள்ளிக்கூடத்திலாவது. ஒழுங்காய்போய்ப் படித்துவருகிறதென்பதை அத்தாட்சிப்பண்ணினால், அல்லது தமது பிள்ளையின் கல்விப்பயிற்சிக்கு போதியதும் தகுந்ததுமென்று வித்தியாபோதனாங்கத்தலைவர் ஏற்றுக்கொள்ளும் வேறு ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறதென்று காட்டினால், அல்லது அப்பிள்ளை பள்ளிக்கூடத்திற்கு வரத்தேவையில்லையென்று வித்தியா போதனாங்கத்தலைவரிடமிருந்து ஓர் உறுதிப்பத்திரங்கொண்டுவந்தால், அப்பிள்ளையின் கல்விப்பயிற்சிக்குப் போதியதும் தகுந்ததுமாக ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கிறதென்று கொள்ளப்படும், ஆனால் ஒரு பெற்றார் தம்பிள்ளை பள்ளிக்கூடத்திற்குப்போகாம லிருப்பதற்கு நியாயமான காரணம் உண்டென்று நீதிபதி ஒத்துக்கொள்ளக்கூடியதாகக் காட்டினால், அப்பிள்ளை பள்ளிக்கூடத்திற்குப்போகாதிருப்பதற்குப் பெற்றார் குற்றவாளியாகார். அந்தப்பிள்ளை வருத்தத்தினால் அல்லது தடுக்கமுடியாத வேறு காரணத்தினால் பள்ளிக்கூடத்துக்குப் போகாதிருக்கிறதென்று அத்தாட்சிப்படுத்தினால், அப்பிள்ளை பள்ளிக்கூடத்துக்குப் போகாமலிருக்க நியாயமான காரணம் உண்டென்று கொள்ளப்படும்.

21 ம் பிரிவு :- சமயபோதனை ஊட்டப்படும் எந்தப் பள்ளிக்கூடமாவது அக்குறிச்சி சங்கத்தார் பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று ஒத்துக்கொண்டாலேயன்றி, ஒரு பிரசித்த சுயபாஷைப் பள்ளிக்கூடமென்று கொள்ளப்படாது :—

(a) அந்தப் பள்ளிக்கூடத்துக்கு நேர சூசியில் குறிக்கப்பட்ட நேரத்திலேயே சமயபோதனை செய்யப்படும்.

(b) அந்தப் பள்ளிக்கூடம் சேர்ந்த சமயமல்லாத வேறு சமயப் பிள்ளைகளுக்கு பெற்றார்கள் வேண்டாமென்றால் சமயபோதனை செய்யப்படாது.

(c) சமயபோதனை நடக்கும்நேரத்தில் அதற்குச் சேராத பிள்ளைகள் வேறு படிப்பில் முயற்சியாய் இருக்க வேண்டும்

(*d*) பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் சமயபோதனை கொடுக்கப்படும் அறையில் இருக்கக்கூடாதென்று விரும்பினால், அப்பிள்ளைகள் சமயபோதனை நடக்கும் அந்நேரங்களில் அப்பள்ளிக்கூடத்தில் வேறு இடங்களில் இருந்து படிக்க விடப்பட வேண்டும். அல்லது அந்நேரங்களில் அப்பிள்ளைகள் வராதிருந்தால் மன்னிக்கப்பட வேண்டும்.

(*e*) இப்பிரிவு இங்கிலீஷ், சிங்களம், தமிழ் என்னும் பாஷைகளில் எழுதி பள்ளிக்கூடத்தில் விளம்பரமான இடத்தில் தூக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேற்சொல்லிய உபவிதிகள் 1918 ம் ஆண்டு பங்குனிமாதம் 2 ௳ திகதியின் கிர்ணயங்கொண்டு மன்னார் பிரிவுப் பள்ளிக்கூடச் சங்கத்தவரால் ஆக்கப்பட்டன.

பீ. ஜீ. த கிளான்வில்,
அக்கிராசனர்.

டாப்பு.

1. மன்னார்த்தீவுப் பகுதி.

மன்னார் கிழக்குப் பள்ளிக்கூடப்பிரிவு
மன்னார் மேற்குப் ௸

2. மாந்தைப் பகுதி.

மாந்தைவடக்குப் பள்ளிக்கூடப்பிரிவு
மாந்தை தெற்குப் ௸
பெருங்களிப்பற்றுப் பள்ளிக்கூடப்பிரிவு
மேற்குமூலைப் பள்ளிக்கூடப்பிரிவு

3. முசலிப் பகுதி.

நானாட்டான் மேற்குப் பள்ளிக்கூடப்பிரிவு
நானாட்டான் கிழக்குப் ௸
முசலி வடக்குப் பள்ளிக்கூடப்பிரிவு
முசலி தெற்குப் ௸

---

பெரிய பிரித்தானியாவும் அயர்லாந்தும் சேர்ந்த ஐக்கிய இராட்சியத்துக்கும் கடல்களுக்கு அப்பாலிருக்கும் ஆதிபத்தியநாடுகளுக்கும் அரசரும் சமயபாலகருமாகிய ஐந்தாம் ஜோர்ஜ் வேந்தர் நாமத்தினாலே:

மகிமைதங்கிய சென்ற் மைக்கேல் அன்ட் சென்ற் ஜோர்ஜ் வரிசையின் கொம்பானியன் பட்டவர்த்தனரும்
இலங்கைக்கும் அதைச்சேர்ந்த ஆதிபத்தியங்களுக்கும் ஆட்சியதிகாரியுமாகிய உத்தமனார்
றெஜினல்ட் எட்வட் ஸ்றப்ஸ் அவர்களாலே

## பிரசித்தம்.

ஆர். ஈ. ஸ்றப்ஸ்.

கீழ்க் குறிக்கும் உபவிதியானது 1910 ம் வருஷத்து 6 ம் நம்பர் நகரசங்க கட்டளைச்சட்டத்தின் 109 (1) ம் பிரிவின் பிரகாரம் கொழும்பு நகரசங்கத்தாரால் செய்யப்பட்டு குறித்த கட்டளைச்சட்டத்தின் 109 (3) ம் பிரிவில் விதித்தபடி அதிகாரமந்திரசபையில் ஆட்சி அதிகாரியவர்களால் பெலப்பிக்கப்பட்டிருக்கின்றது: ஆனபடியினாலே:

ஆட்சி அதிகாரியாகிய நாம், குறித்த கட்டளைச்சட்டத்தின் 109 (3) ம் பிரிவின் பிரகாரம் நம்மீது வைக்கப்பட்ட தத்துவத்தைக்கொண்டு இவ்வுபவிதியைப் பிரசித்தப்படுத்துகிறோமென்பதை நீவிர் அறிந்து கொள்வீராக.

இலங்கைத்தீவில் கொழும்பில் எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு ஆடிமாதம் இருபத்தொன்பதாந் திகதி கொடுக்கப்பட்டது.

உத்தம தேசாதிபதியவர்களின் கட்டளைப்படி,
ஏ. எஸ். பெக்டென்,
அக்திங் கொலோனியல் சக்கிறுத்தார்.

கடவுள் அரசரைக் காத்தருள்க.

---

குறித்த உபவிதி.

நெருப்புப்பெட்டி செய்தல்.

1916 ம் ஆண்டு பங்குனிமாதம் 3 ம் திகதி பிரசுரப்படுத்தப்பட்ட 6,782 ம் நம்பர் அரசாட்சி கெசெற் பத்திரிகையில் வெளிவந்த தீங்கு விளைவிக்கக்கூடிய வியாபாரம் அல்லது தொழிலைப்பற்றிய உபவிதியுடன் பின்பு சேர்க்கப்பட்டவிதி.

1910 ம் வருஷத்து கட்டளைச்சட்டத்தின் 212 ம் பிரிவின் பிரகாரம் கீழ்க்குறிக்கும் வியாபாரம் அல்லது தொழில் கேடுவிளைவிக்கக்கூடியதும் அல்லது தீங்குவிளைவிக்கக்கூடிய வியாபாரம் அல்லது தொழில் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

---

## அரசாட்சியாரின் விளம்பரம்.

---

1910 ம் ஆண்டின் கொழும்பு நகரசங்க கட்டளைச்சட்டம்.

அறிவித்தல்.

கொழும்பு நகரசங்கத்தார் 1910 ம் ஆண்டின் 6 ம் நம்பர் கட்டளைச்சட்டத்தின் 233 ம் பிரிவின் பிரகாரமும் அதிகாரமந்திர சபையிலே ஆட்சி அதிகாரியவர்களுடைய அனுமதியுடனும் கீழ்க்குறிக்கும் காரணத்துக்காக இடங்கள் பாவிக்கிறதற்குக் குறித்த உபவிதியின் 212 ம் பிரிவின் பிரகாரம் கேடு விளைவிக்கக்கூடியதும் அல்லது தீங்கு விளைவிக்கக்கூடிய வியாபாரம் அல்லது தொழில் என்று தீர்க்கப்பட்ட வியாபாரத்தை அல்லது தொழிலைப்பற்றி 1916 ம் ஆண்டு பங்குனி ௴ 10 ௳ திகதி பிரசுரப்படுத்தப்பட்ட 6,783 ம் நம்பர் அரசாட்சி கெசெற் பத்திரிகையில் வெளிவந்த கட்டளைச்சட்டத்தின் 233 ம் பிரிவின் பிரகாரம் அறவிடப்படும் சலாரின் B அட்டவணையுடன் கீழ்க் குறித்திருப்பதைச் சேர்த்துக்கொள்ளத் தீர்மானித்துக்கொண்டார்களென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நெருப்புப்பெட்டிசெய்தல், லைசன்ஸ் சலார் ரூபா 25.

உத்தமனாரது கட்டளைப்படி,
ஏ. எஸ். பெக்டென்,
அக்றிங் கொலோனியல் சக்கிறுத்தார்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1918 ௵ ஆடி ௴ 29 ௳.

1889 ம் ஆண்டின் கிராமச் சங்கச் சட்டத்தின் 16 ம் பிரிவின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட புங்குடுதீவுப் பகுதிக் கிராமச்சங்கத்தார் அந்தப் பகுதிச் சனங்களாற் றமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு 1918 ம் ஆண்டு பங்குனிமாதம் 15 ந் திகதியைக்கொண்ட 6,929 ம் இலக்கக் கவுண்மேந்து "கசற்" பத்திரிகையில் பிரசுரம்பண்ணப்பட்ட பிரமாணங்களோடுகூட இன்னும் ஒரு பிரமாணம் 54 ம் இலக்கம் இடப்பட்டு மேற்குறித்த சட்டத்தின் 6 ம் பிரிவின் 22 ம் கீழ்ப்பிரிவுக்கமைய உண்டுபண்ணி வட மாகாணம் ஏசண்டுத்துரை மூலமாக உத்தம ஆட்சியதிகாரி அவர்கள் அதிகார மந்திர சபையாருடைய ஆலோசனையோடு அங்கீகரிப்பதற்கு அல்லது தள்ளிவிடுவதற்கு அனுப்பியிருப்பதால்.

உத்தம ஆட்சியதிகாரியானவர் மேற்கூறிய சட்டத்தின் 7 ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவத்தைக்கொண்டும் அதிகார மந்திரசபையாருடைய ஆலோசனையோடும் இத்துடன் அனைத்திருக்கும் கூட்டப்பட்ட 54 ம் இலக்க பிரமாணத்தை அங்கீகரிக்கச் சித்தமாயினர். இச்சட்டத்தின் 7 ம் பிரிவிற் கூறியபடி அங்கீகரிக்கப்பட்ட பிரமாணம் இதன் கீழ் பிரசுரம் பண்ணப்பட்டிருக்கின்றது.

உத்தமனுர் கட்டளைப்படி,

கொழும்பு, கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
1918 ம் ஹு ஜுலாய்மீ 27 ந் உ.

ஏ. எஸ். பெக்டன்,
எக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

## பிரமாணம்.

புங்குடுதீவுப் பகுதியிலிருந்து மாட்டுச் சாணத்தை வேறிடத்துக்கு என்ன தேவைக்கென்றாலும் கிராமச்சங்கத்தலைவருடைய உத்தரவுப் பத்திரம் பெறுமல் அகற்றப்படாது. அப்படியான உத்தரவுப்பத்திரம் என்ன மாதிரியாக என்ன நிபந்தனைகளுக்குட்படக் கொடுக்கலாம் என்றதைக் கவுண்மேந்து ஏசண்டர் அவர்களுடைய அநுமதியுடன் தீர்மானம் பண்ணச் சங்கத்தாருக்குத் தத்துவமுண்டு.

## காணி விற்பனவுகள்.

No. 873, N. P.—1918 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 3 ந் திகதி, செவ்வாய்க்கிழமை பகல் 1 மணிக்கு தன் ஆபீசில் வடமாகாணத்து கவுண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது தீர்துவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும். 22 காணித்துண்டுகள், வடமாகாணத்து வடமராட்சி கிழக்கிலும் மறுபகுதிகளிலு மிருக்கின்றன.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. று. ப. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 4,626. குறிச்சி—குடத்தனை. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 1 | மணல்காடு | .. என். வயித்தியாம்பிள்ளை | .. காடு நெற்செய்கைக்குரியது | .. 3 1 23 | .. 18 |
| 1a | மணல்காடு | .. — | .. 124,164 ம் படக்காணியின் சொந்தக்காரன் கூட்டிச்சேர்த்த நிலம் | .. 0 0 20 | .. 20 |
| | | பிளான் இலக்கம் 4,971. குறிச்சி—நாவெட்டி கிழக்கு. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 2 | வாது | .. கே. கணபதிப்பிள்ளை | .. வெளிநிலம் நெற்செய்கைக்குரியது | .. 1 1 1 | .. 15 |
| | | பிளான் இலக்கம் 4,994. குறிச்சி—குமுளமுனை. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 1 | நடுவெளி | .. கத்தோலிக்க குரு வி. டிஸன்ட்ஸ் | .. வெளிநிலம் நெற்செய்கைக்குரியது | .. 9 3 7 | .. 15 |
| 2 | நடுவெளி | .. — | .. ரோட்டுக்குவிட்ட நிலம் விற்பனவில்லை | .. 0 1 15 | .. — |
| 3 | கெருந்திரகமம் | .. — | .. எஸ். மரியாம்பிள்ளை கூட்டிச்சேர்த்த நிலம் | .. 0 2 19 | .. 24 |
| | | பிளான் இலக்கம் 4,993. குறிச்சி—பொன்னுவெளி. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 1 | ஊவையடி | .. என். சுவாமிநாதர் | .. வெளிநிலம் நெற்செய்கைக்குரியது | .. 2 3 27 | .. 15 |
| 2 | கிராஞ்சிக்குடா | .. டிை | .. டிை | .. 1 3 38 | .. 15 |
| 3 | டிை | .. — | .. ஒழுங்கைக்குவிட்ட நிலம் விற்பனவில்லை | .. 0 0 27 | .. — |
| | | பிளான் இலக்கம் 5,031. குறிச்சி—ஆலியவளை. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 1 | கடற்கரைமணல் | .. என். சின்னையா | .. என். சின்னையா கூட்டிச்சேர்த்த நிலம் | .. 0 1 35 | .. 80 |
| 2 | டிை | .. டிை | .. வெளியான மணற்றரை | .. 0 1 0 | .. 18 |
| 3 | டிை | .. — | .. ஒழுங்கை விற்பனவில்லை | .. 0 0 6 | .. — |
| | | பிளான் இலக்கம் 4,989. குறிச்சி—இயக்கச்சி—உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 1 | இராசவெளிக்காடு | .. என். தம்பையா | .. காடு, தென்னமரத்துக்குத்தகுந்தது | .. 3 0 6 | .. 40 |
| 2 | டிை | .. — | .. தெருவுக்குவிட்ட நிலம் விற்பனவில்லை | .. 1 2 30 | .. — |
| 3 | டிை | .. — | .. கிணற்றுக்கும் வண்டிக்காலுக்கும்விட்ட நிலம் | 1 0 24 | .. — |
| 4 | டிை | .. — | .. காடு .. | .. 0 3 4 | .. 40 |
| 5 | டிை | .. — | .. காடு .. | .. 5 3 5 | .. 40 |
| 6 | டிை | .. — | .. ரோட்டுக்குவிட்ட நிலம் விற்பனவில்லை | .. 1 0 23 | .. — |
| 7 | டிை | .. — | .. என். தம்பையா கூட்டிச்சேர்த்த நிலம் | .. 1 0 15 | .. 67·50 |
| 8 | டிை | .. — | .. டிை டிை | .. 0 1 6 | .. 67·50 |
| | | பிளான் இலக்கம் 4,987. குறிச்சி—நயினர்தீவு. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 1 | காலையிற்புலம், வவான் | .. என். வலலிபுரம் | .. வெளிநிலம் தென்னமரத்துக்குத் தகுந்தது | .. 2 0 19 | .. 16.50 |
| 2 | டிை | .. — | .. கடற்கரைக்குவிட்ட நிலம் | .. 3 2 11 | .. — |

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் வடமாகாணக் கவுண்மேந்து ஏசன்றுத்துரை யிடத்திலும் படங்களைப்பற்றி அழவுகந்தோரின் பெரிய துரையிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறுத்தார் ஆபீசில்,
கொழும்பில், 1918 ம் ஹு ஆடிமீ 26 ந் உ.

ஏ. எஸ். பெக்டன்,
அக்றின் கலோனியல் சக்கிறுத்தார்.

## அறிவித்தல்.

1918 ம் ஆண்டு ஆடி மாதம் 5 ந் திகதி 6,954 ம் இலககத்தைக்கொண்ட இலங்கை கசட் பத்திரிகையில் பிரசித்தப்படுத்திய, முல்லைத்தீவில் 1918 ம் ஆண்டு ஆவணி மாதம் 14 ந் திகதிக்கு நியமிக்கப்பட்டிருந்த காணி விற்பனவு 1918 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 11 ந் திகதி புதன்கிழமைக்குத் தவணை போடப்பட்டிருக்கிறதென்பதை இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

இராசாங்க லிகிதரின் கந்தோரில்,
1918 ம் ஆண்டு ஆடிமீ 25 ந் உ.

ஏ. எஸ். பெக்டன்,
அக்றிங் இராசாங்க லிகிதர்.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நோர்உவுட், மஸ்கேலியா தெருவில் 30 ம் கட்டையிலுள்ள பகிரங்கவேலைப் பகுதிக் கூலி லாயங்களுக்கு கக்கூசுகள் கட்டுகிறதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 6,863. குறிச்சி—மஸ்கேலியா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | ஒருக்குவுட் தோட்டம் .. | தேயிலை .. | மெஸ் சீ. எச். லாம்ப் .. | .. 0 0 6·5 |

எடுத்துககொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஷப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ௵ ஆகஸ்டுமாதம் 30 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1918 ம் ௵ ஓகஸ்ட் மீ 2 ந் உ.

சீ. எஸ். வோன்,
அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 6,979, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ௵ (ஓகஸ்ட்) ஆவணி மீ 2 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம் 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் காகாணம் குருநாகல் டிஸ்திறிக் கட்டுகம்பொல கற்பத்தைச்சேர்ந்த யட்டிகாா கோறளையில் கேனகெதர, முகலன்யாய, கலகும்புற என்னும் கிராமங்களிலுள்ள இத்துட னணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் 4,490.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| ப 108½ | .. ரோட்டு | 0 | 1 | 27 |
| ஃ 109½ | .. ரோட்டு | 0 | 0 | 30 |
| w 109 | .. ரோட்டு | 0 | 0 | 35 |
| | | 0 | 3 | 12 |

எல்லைகளாவன : வடக்கு-பிதுமவிலிருந்து வரும் ரோட்டு; கிழக்கு-சான்ஸ் பி. டி. சில்வா அவர்கள் சில்வதென்ன தோட்டம்; தெற்கு-சான்ஸ் பி. டி. சில்வா அவர்கள் உரித்தாடும் சில்வதென்னதோட்டம், 300,295 ம் உ. ப. ல் காணும் காணி; மேற்கு-300,295 ம் உ. ப. ல் காணும் காணி, சான்ஸ் பி. டி. சில்வா அவர்கள் உரித்தாடும் சில்வதென்ன தோட்டம்.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1428 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 94—1918.]

---

[அறிவித்தல் இல. 6,980, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ௵ (ஓகஸ்ட்) ஆவணி மீ 2 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாகல் டிஸ்திறிக் கட்டுகம்பொல கற்பத்தைச்சேர்ந்த யட்டிக்கா கோறளேயில் கேனே கெதிர என்னும் கிராமத்திலுள்ள இத்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித் துண்டு:—

பிரதமபடம் 4,490.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|
| v 108 | யோதயகடவெவ (குளம்) | 1 | 0 | 2 |
| w 108 | டிககல (கற்பாறை) | 3 | 2 | 6 |
| x 108 | வெகறகல (கற்பாறை) | 9 | 3 | 2 |
| | | 14 | 1 | 10 |

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய டிக்கலமுகலான; கிழக்கு-முடிக்குரிய டிக்கலமுகலான, ஓர் ரோட்டு, சான்ஸ் பி. டி. சில்வா அவர்கள் உரித்தாடும் சில்வதென்ன தோட்டம்; தெற்கு-சான்ஸ் பி. டி. சில்வா அவர்கள் உரித்தாடும் சில்வதென்ன தோட்டம்; மேற்கு-சான்ஸ் பி. டி. சில்வா அவர்கள் உரித்தாடும் சில்வதென்ன தோட்டம், குளக்கட்டு, சான்ஸ் பி. டி. சில்வா அவர்கள் உரித்தாடும் சில்வதென்னதோட்டம்.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1429 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 95—1918.]

---

[அறிவித்தல் இல. 6,981, அநுராசபுரம்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினும் தங்களுககுண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ஆடு (ஓகஸ்ட்) ஆவணிமீ 2 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமத்திய மாகாணம் நுவரகம்பலாத்த விலாச்சிய கோறளேயைச்சேர்ந்த விலாச்சிய துலானையில் இகலகம என்னுங் கிராமத்திலுள்ள இத்துட னிணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 5 ஏக்கர் 1 றூட் 5 பேர்ச்சு விசாலமுடையதும் 712 ம் பிரதமபடத்தில் 8 ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதும் சாமானியமாய் பாலுவத்த என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டுவருவதுமான காணி. இதற் கெல்லைகளாவன: வடக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட இகலகமலந்த, கொறவ்எல, பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட இகலகமலந்த; கிழக்கு- பாழ்நில கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட இகலகமலந்த, நொச்சியகமவிலிருக்கும் நயினுமலே பிச்சை உரித்தாடும் புரானவெல; தெற்கு-நொச்சியகமவிலிருக்கும் நயினுமலே பிச்சை உரித்தாடும் புரானவெல; மேற்கு-பாழ்நில கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட இகலகமலந்த, பாழ்நில கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட அலுத்அக்கர.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1430 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[அநுராசபுரம் வி. உ. 41—1918]

---

[அறிவித்தல் இல. 6,982, மட்டுக்களப்பு.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்கு உண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1918 ம் ஆண்டு (ஓகஸ்ட்) ஆவணிமீ 2 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் பிரகாரம் கீழ் மாகாணத்து அரசாட்சி ஏசன்றவர்களுக்கு முன்பாக தெரிபட்டு தங்களுக்கு உண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய அரசாட்சி ஏசன்றவர்கள் தமக்கு உண்டாய 1897 ம் ஆண்டின் 1 ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஆர். ஏ. ஜி. பேஸ்தின்,
கீழ் மாகாண அரசாட்சி ஏசண்டு.

சுட்டிய காணிகளின் விவரம்.

I.—இத்துட னிணைக்கப்பட்டிருக்கும் படத்தில் காட்டப்பட்டிருக்கும் பிரகாரம் கீழ் மாகாணத்து மட்டுக்களப்பு டிஸ்திறிக்கின் பாணமைப்பற்றைச்சேர்ந்த சலவைக் கிராமத்தில் 5,163 ம் இலக்கப் பிரதமபடத்தில் 1–14 ம் இலக்கக் கண்டங்களாக விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகளின் எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரியதென்று சாதிக்கப்படும் சலவைப்பூமி; கிழக்கு-முடிக்குரியதென்று சாதிக்கப்படும் சலவைப் பூமி; தெற்கு-முடிக்குரியதென்று சாதிக்கப்படும் சலவைப்பூமி; மேற்கு-முடிக்குரியதென்று சாதிக்கப்படும் சலவைப்பூமி:—

| கண்டத்தின் இலக்கம். | காணியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | பொன்ககவத்த | 0 | 1 | 24 |
| 2 | சலவைப்பூமி | 0 | 2 | 6 |
| 3 | ஷை | 0 | 1 | 25 |
| 4 | ஷை | 0 | 1 | 25 |
| 5 | ஷை | 0 | 1 | 19 |
| 6 | ஷை | 0 | 1 | 11 |
| 7 | ஷை | 0 | 1 | 24 |
| 8 | மைல்ககவத்த | 0 | 0 | 23 |
| 9 | தம்பககவத்த | 0 | 1 | 15 |
| 10 | வீரகேவத்த | 0 | 0 | 37 |
| 11 | பழுககவத்த | 0 | 1 | 11 |
| 12 | ஷை | 0 | 1 | 1 |
| 13 | சூரியககவத்த | 0 | 0 | 32 |
| 14 | சலவைப்பூமி (ஒழுங்கைக்காக விடப்பட்டது) | 0 | 2 | 27 |
| | | 5 | 0 | 0 |

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1430—1431 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

II.—இத்துடனணைக்கப்பட்டிருக்கும் படத்தில் காட்டப்பட்டிருக்கும் பிரகாரம் கீழ் மாகாணத்து மட்டக்களப்பு டிஸ்திறிக்கின் பாணமைப்பற்றைச்சேர்ந்த சலவைக்கிராமத்தில் 5,163 ம் இலக்கப் பிரதமபடத்தில் 15–21 ம் இலக்கக் கண்டங்களாக விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகளின் எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரியதென்று சாதிக்கப்படும் சலவைப்பூமி; கிழக்கு-முடிக்குரியதென்று சாதிக்கப்படும் சலவைப் பூமி; தெற்கு-முடிக்குரியதென்று சாதிக்கப்படும் சலவைப்பூமி; மேற்கு-முடிக்குரியதென்று சாதிக்கப்படும் சலவைப் பூமி:—

| கண்டத்தின் இலக்கம். | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 15 .. | சலவைப்பூமி .. .. | 0 | 0 | 16 |
| 16 .. | ஷை .. | 0 | 0 | 35 |
| 17 .. | ஷை .. | 0 | 0 | 24 |
| 18 .. | ஷை .. .. | 0 | 1 | 4 |
| 19 .. | ஷை .. | 0 | 0 | 13 |
| 20 .. | சலவைப்பூமி .. .. | 0 | 0 | 16 |
| 21 .. | ஷை .. .. | 0 | 0 | 15 |
| | | 1 | 0 | 3 |

[அறிவித்தல் இல. 6,983, திருக்கோணமலை.]

**1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.**

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1918 ம் ௵ (ஓகஸ்ற்) ஆவணிமீ 2 ௨ தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே திருக்கோணமலை கச்சேரியில் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணிகளை அல்லது அதிலேதாவ தொன்றை அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு 1897 ம் ஆண்டின் 1 ம் இலக்க சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் முடிக்குரியன என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஜீ. உட்மன்,
உதவி அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட காணியின் விபரம்.

1. கீழ்மாகாணம் திருக்கோணமலை டிஸ்திறிக்கு தம்பலகமப்பற்று பெரியகிணியாவிலிருக்கும் பட்டியனூத்துக் குளம் என்றழைக்கப்படும் 5,298 ம் இல. பிரதமபடத்திற் சொல்லிய 1 ம் இல. கண்டம். எல்லை: வடக்கு-முடிக்குரிய பட்டியனூற்றுக்குளம் காடு; கிழக்கு-முடிக்குரிய பட்டியனூற்றுக்குளம் காடும் 201,025 ம் உறுதிப்படத்திற் சொல்லிய தரையும; தெற்கு-முடிக்குரிய பட்டியனூற்றுக்குளம் காடு; மேற்கு-5,298 ம் இல. படத்திற் சொல்லிய 3 ம் இல. கண்டம் (குளக்கட்டு). விசாலம் ஏக்கர் 23 றூட்டு 0 பேட்சஸ் 2.

2. திருக்கோணமலை தம்பலகமப்பற்றுப் பெரிய கிணியாவிலிருக்கும் பட்டியனூற்றுக்குளம் என்றழைக்கப்படும் 5,298 ம் இல. படத்திற் சொல்லிய 2 ம் இல. கண்டம். எல்லை: கிழக்கு-5,298 ம் இல. படத்திற் சொல்லிய 3 ம் இல. கண்டம் (குளக்கட்டு) தெற்கும் மேற்கும் வடக்கும்-முடிக்குரிய பட்டியனூற்றுக்குளம் காடு. விசாலம் ஏக்கர் 22 றூட்டு 3 பேட்சஸ் 19.

3. திருக்கோணமலை தம்பலகமப்பற்றுப் பெரியகிணியாவிலிருக்கும் 5,298 ம் இல. படத்திற் சொல்லிய 3 ம் இல. கண்டம் (குளக்கட்டு). எல்லை: வடக்குந் தெற்கும்-முடிக்குரிய பட்டியனூத்துக்குளம் காடு; கிழக்கு-5,298 ம் இல. படத்திற் சொல்லிய 1 ம் இல. கண்டம்; மேற்கு-5,298 ம் இல. படத்திற் சொல்லிய 2 ம் இல. கண்டம். விசாலம் ஏக்கர் 0 றூட்டு 2 பேட்சஸ் 3.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1432 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[அறிவித்தல் இல. 6,984 கேகாலை.]

**1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.**

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1918 ம் ௵ (ஓகஸ்ட்) ஆவணிமீ 2 ௨ தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கேகாலை கச்சேரியில் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டென முகாமுகமாயாவது அல்லது எழுத்து மூலமாவது சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற் சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாத குறித்த காணிகளை முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஜி. எவ். ஆர். பிறவுனிங்,
உதவி அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட காணியின் விபரம்.

இத்துடன் அணைத்திருக்கும் படங்களில்* விபரிக்கப்பட்டிருக்கும் சப்பிரகாம மாகாணத்தில் கேகாலை டிஸ்திறிக்கில் இனிகொடகோறளை டியலதாமுனுப்பற்றுவில் வேக்கொலதெனியா என்னும் கிராமத்திலிருக்கும் பின்னுற் சொல்லப்படும் காணிகள்:—

I.—பிரதமபடம் 2,638.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | கல்கெற்றியேகேனேவத்தை .. | 4 | 3 | 10 |
| 5 | கல்கெற்றியேகேனே .. | 2 | 1 | 0 |
| 6 | புஹுகாகமுலாதெனிய .. | 0 | 0 | 15 |
| 8 | போகாகமுலாகேன அல்லது கல்கெற்றியேவத்தை .. .. | 11 | 0 | 3 |
| 9 | புஹுகாகமுலாகேன அல்லது கல்கெற்றியேகேன .. .. | 4 | 0 | 22 |
| 10 | கல்கெற்றியேகேன .. | 6 | 0 | 34 |
| 11 | கல்கெற்றியேமுகலான .. | 1 | 2 | 9 |
| | | 30 | 0 | 13 |

எல்லை: வடக்கு-கல்லத்தலாகே களுகாமிக்கும் மறுபேருக்குமுரிய கோனமடித்தயேன; கிழக்கு-கல்லத்தலாகே களுகாமிக்கும் மறுபேருக்கும் உரிய கங்கிமேயேன அல்லது மொறகொல்லாகவயேன முகலானவும், கல்பொடக் கோறளை ஊர் எல்லையும்; தெற்கு-கல்பொடக்கோறளை ஊர் எல்லை; மேற்கு-கல்லத்தலாகே களுகாமிக்கும் மறுபேருக்குமுரிய நேல்கொல்லேயேன, நேல்கொல்லேவத்தை, வேக்கொலதெனிய, கல்லத்தலாகேகெதற டிங்கிறி அம்மாவிற்கும் ஏபிறும் அப்புவிற்கும் உரிய வடுவன்னேவத்தை, கல்லத்தலாகே டிங்கிறி மெனிக்காவிற்கும் மறுபேருக்குமுரிய திருவேயேன, கறண்டுப்பளை தோட்டம் அல்லது "வொறஸ்றில்" தோட்டமும் (சப்பிறின்றன்டன் ஜே. இடேப்).

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1433 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

II.—பிரதமபடம் 2,638.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 4 .. | கோனமதித்தேதெனிய அல்லது வடுவென்னேவத்தேடெனிய .. .. | 0 2 3 |

எல்லை: வடக்கும் கிழக்கும்-கல்லத்தலாகே கலுகாமிக்கும் மறுபேருக்குமுரிய நீல்கொல்லேவத்தை; தெற்கு-வேக் கொல்லேதெனிய கல்லத்தலாகேகெதற டிங்கிரி அம்மாவிற்கும் ஏபிரும் அப்புவிற்கும்உரிய வடுவென்னேவத்தை; மேற்கு-கலல்தலாகே டிங்கிரிமெனிக்காவிற்கும் மறுபேருக்கும் உரிய திருவேகேன.

---

[அறிவித்தல் இல. 6,985, கேகாலே.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணிகளிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள், 1918 ம் ௵ (ஓகஸ்ட்) ஆவணிமீ 2 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கேகாலேக் கச்சேரியில் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அவைகளிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டென முகாமுகமாயாவது அல்லது எழுத்து மூலமாயாவது சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லிய சட்டங்களினுல கொடுகைப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாத குறித்த காணிகளை முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ஜீ. எவ். ஆர். பிறவுனிங்,
உதவி அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட காணிகளின் விவரம்.

இத்துடன் அணைத்திருக்கும் படத்தில் விபரித்திருக்கும் சப்பிரகாம மாகாணம் கேகாலே டிஸ்திறிக்கில் கல்பொட கோறளையில் எகொடபொத்தப்பற்று அத்தனுகொட என்னும் கிராமத்திலிருக்கும் பின்னுல் சொல்லப்படுங் காணிகள் :—

I.—பிரதமபடம் 2,638.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 2 .. | பனகல (கற்பார்) .. .. .. .. | 0 1 32 |

எல்லை: வடக்கு-இனிகொடக் கோறளை ஊர் எல்லை; கிழக்கும் தெற்கும்-234,848 இலக்கப்படத்தில் விபரிக்கப்பட்டிருக்கும் காணி; மேற்கு-எம். எம். லொக்குவண்டாவிற்குரிய றூக்ககாமூலகேனவத்தை.

II.—பிரதமபடம் 2,638.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 3 .. | பனகல (கற்பார்) .. .. .. .. | 0 0 14 |

எல்லை: வடக்கு-கறண்டுப்பளைத் தோட்டக் கம்பெனிக்குரிய கங்கிமகேன; கிழக்கு-234,848 ம் இலக்கப் படத்தில் விபரிக்கப்பட்டிருக்கும் காணி; தெற்கும் மேற்கும்-இனிகொடக் கோறளை ஊர் எல்லை.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1434 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கச் சட்டத்தின் 8 ம் பிரிவுக்கமையச் செய்யப்படும் அறிவித்தல்.

பிறக்கிராசியார் மெஸ் வ. கனகரத்தினம் அவர்களின் கீழ் உடன்படிக்கைப்பட்ட விகிதர் ஆகவிருக்கும் சுன்னுகம் அளவெட்டி தெற்கு சயம்பர் கந்தையாபிள்ளை ஆகிய நான் யாழ்ப்பாண டிஸ்திறிக்ற் தமிழ்ப்பாஷையில் நொத்தாரிஸ் உத்தியோகம் நடத்துதற்குரிய கடைசிப் பரீட்சைக்கு போகக் கொழும்புப் பதிவுக் காரியஸ்த தலைவர் அவர்களுக்கு, இதற்கு மூன்று மாதங்களின் பின் மனுப்பண்ண எண்ணி இருக்கிறேன் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

அளவெட்டி தெற்கு,
சுன்னுகம், 1918 ம் ௵ ஆடிமீ 17 ந் உ.

ச. கந்தையாபிள்ளை.

---

கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

புத்தளந் தென் உப்புமாவிலுள்ள 24 ம், 28 ம், 29 ம் உப்புக்குதங்களைப் பழுதுபார்க்கும் வேலை யொப்பந்தத்திற் கொடுக்கப்படும்.

2. இவ்வொப்பந்தத்தைக் கேட்க விரும்புபவர் தமது கேள்விப்பத்திரத்தை யோர் முத்திரித்த உறையிலிட்டு அதன் இடதுமூலையில் "புத்தளந்தென் உப்புமாவிலுள்ள 24 ம், 28 ம், 29 ம் உப்புக் குதங்களைப் பழுதுபார்க்கு மொப்பந்தக்கேள்வி" யென்றெழுதி புத்தளம் உதவி யேசண்டவர்கட்கு ஆவணிமாதம் 12 ந் திகதி பிற்பகல் ஒல் மணிக்கு முந்திக் கிடைக்கத்தக்கதாக வனுப்பவேண்டும்.

3. கேள்விக்காறன் தனது கேள்விப்பத்திரத்தை யனுப்பமுந்தி யெந்தக் கச்சேரியிலாவது ஒரு கச்சேரியில் முற்பணமாகப் பத்து ரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றிச்சீட்டைக் கேள்விப்பத்திரத்தோ டிணைக்கவேண்டும்.

4. தனது கேள்வி யேற்றுக்கொள்ளப்படுங் காலத்தில் கேள்விக்காறன் தான் வேலையைக் கிரமமாய் முடித்துப்போடுவதாகக் கேள்வி யேற்றுக்கொள்ளப்பட்டபின் ஞாயமான காலத்துள் உதவி யேசண்டருடன் ஓர் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளவேண்டும்.

5. மேற்படி யுடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினுல் கேள்விக்காறன் கட்டிய முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

6. கேள்விக்காறன் தனக்குக் காகிதங்கள் கிடைக்கத்தக்கதாகப் புத்தளத்தில் ஓர் விலாசத்தைக் குறிக்கவேண்டும்.

7. உடன்படிக்கை பண்ணிக்கொண்டதின் 3 கிழமைக்குள் வேலையை முடித்துப்போடவேண்டும்.

8. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தளம் உப்புத்துரை யவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

செய்யவேண்டிய வேலையின் விபரம்.

தற்போது மேற்கூறிய குதங்களில் உளுத்தும் பழுதாயும் போன மரத்தடி முதலியவற்றை யெடுத்துப்போட்டுப் புதிய மரத்தடி முதலியவற்றைப் போடவேண்டும்.

கூரையைப் புதுக்கிடுகினுல் வேய்ந்து அதற்குமேல் பாரமாகப் பூட்டுகளை வைக்கவேண்டும்.

பக்கச் செத்தைகளைப் புதுக்கிடுகினுல் அடைக்கவேண்டும்.

உள் நிலத்தை வேண்டிய இடங்களில் மண் போட்டுயர்த்தி இறுக்கி மட்டமாக்கவேண்டும்.

குதங்களின் உட்புறத்திற்கு புதுக் கிடுகினுல் வரிச்சுப் பிடிக்கவேண்டும்.

பக்கச்செத்தைகள் நெளிவாய் இருக்குமிடங்களில் அந்நெளிவை யெடுத்துத் திருப்பி நேராய் அடைக்கவேண்டும்.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
உதவி யேசண்டருக்காக.

புத்தளங் கச்சேரி,
1918 ம் ஆண்டு ஆடிமீ 29 ந் உ.

---

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.